சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 41 / 2020

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி 13.07.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஸ்ரீதரன் | கிராமம் : | |
| த/பெ : | சேஷன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல் அறிக்கை இணையதள நகல் - ம.சா.ஆ.1

2) விடுவிப்புச்சான்று அசல் - ம.சா.ஆ.2

3) மருத்துவ பில்கள் அசல் - ம.சா.ஆ.3

மேற்படி ம.சா.ஆ.3 எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தின் போது நான் மிதிவண்டியில் சென்றுக் கொண்டிருந்தேன். நான் விபத்து சமயத்தில் கரூர் திருச்சி பிரதான சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றுக் கொண்டிருந்தேன். எனது வீடு கரூர் திருச்சிகிழமேல் சாலையில் வடக்கு பக்கம் உள்ளது. நான் கிழக்குநோக்கி சென்றுக்கொண்டிருந்த போது பின்னால் வாகனம் வருவதை கவனிக்காமல் திடீரென வலது பக்கம் திரும்பிதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கவனக்குறைவு தான் காரணம் என்பதால் 1,2 எதிர்மனுதாரர்கள் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால்சரியல்ல. நான் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு அரசு மருத்துவமனையில் மட்டும் தான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் பிஸியோதெரபி சிகிச்சை எடுத்துக் கொள்வதற்கு மருத்துவர் பரிந்துரைக்கவில்லை நானே சுயமாக பிஸியோதெரபி சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் பிஸியோதெரபி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஆவணம்

மற்றும் அதற்கான கட்டண ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை. ம.சா-ஆ.3 ஆவணம் மருத்துவக் கட்டண ரசீதும் வாகன கட்டண ரசீதும் சேர்ந்தது என்றால் சரிதான். வாகன கட்டண ரசீல் தொகை போட்டு ஓட்டுநரின் கையொப்பம் இல்லை. முன் பக்கத்தில் கையொப்பம் உள்ளது. 21.01.2020 ல் குளித்தலையில் திருச்சி சென்றதாக டிரிப் சீட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த தேதியில் விடுவிப்புச்சான்று, புறநோயாளிச்சீட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களுக்கான மருத்துவரின் பரிந்துரையை தாக்கல் செய்யவில்லை. தனியார் மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ கட்டண ரசீதில் மருத்துவரின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால்சரியல்ல. நான் கூலி வேலை செய்து மாதம் ரூ.10,000 சம்பாதித்து வந்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்தவிபத்தினால் எனக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயம் முழுவதுமாக குணமாகிவிட்டது ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்துசமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின்ஓட்டுநருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒம் / ஸ்ரீதரன்

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.